Documentary films on Public Health.

* 93 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct cinema theatres in Government hospitals in order to screen documentary films on Public Health; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு

* **94 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மதுரையில் நடமாடும் கண் வைத்தியசாலை செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் வேலைத் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்தக் கேள்வி சில காலத்திற்கு முன் எழுப்பப்பட்டுள்ளது. அப்போதிருந்த நிலவரப்படி சட்டப் பேரவையின் முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களது கண் சிகிச்சை முகாம் திட்டப்படி நடமாடும் வைத்தியசாலை எல்லா மாவட்டங் களிலும் செயல்படுமா? இதன் வேலைத் திட்டம் என்ன? எத்தனை ஆண்டுகள் இது நடைபெறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தொடங்கப்பட்டிருக்கிற முயற்சி எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல் படும். முன்பு நடமாடும் கண்சிகிச்சை மருத்துவ மனை சென்னையில் ஒன்றும், மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் ஒன்றும் நடைபெற்று வந்தது. அவர்கள் இருபது அல்லது இருபத்து நான்கு காம்புகள் வரை நடத்தி சிகிச்சை வழங் கினர். மேலும் அதனை விரிவுபடுத்த வேண்டுமென்ற முறையில் மதுரையில் 3 நடமாடும் கண் மருத்துவ குழுக்களும், சென்னையில் 2 நடமாடும் மருத்துவக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் கூடுமானவரையில் எல்லாப்

@ 654 -ம் பக்கத்தில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.